# அமெரிக்க அளவிலான தேசிய தமிழ்த்தேனீ போட்டிகள் – 2008

மூன்று தமிழ்த்தேனீ  போட்டிகள் நடைபெறும்

திருக்குறள் தேனீ
தமிழ்ப்பேச்சுத்தேனீ
தமிழறிவுத்தேனீ

## திருக்குறள் தேனீ

கீழ்க்காணும் குறளுக்கு குறளும் பொருளும்

ஐந்தாம்  வகுப்பு வரை – 15 திருக்குறள்
34,70,90,100,102,108,127,151,190,215,293,305,314,319,396

ஐந்தாம் வகுப்புக்கு மேல் – 25 திருக்குறள்
34,70,90,100,102,108,127,151,190,215,293,305,314,319,396,411,423,435,467,504,
595,605,616,619,664

## தமிழ்ப்பேச்சுத்தேனீ

ஏதேனும் ஒரு தலைப்பில் 3-4 நிமிடங்களுக்கு மிகாமல் பேசவேண்டும்.
**தலைப்புகள்:**
ஓடி விளையாடு
தேமதுரதத்தமிழ்க்கல்வி
அறம் செய விரும்பு
யாதும் ஊரே யாவரும் கேளிர்

## தமிழறிவுத்தேனீ

தமிழறிவு வினாடி வினா Jeopardy (இடர் கலை) வடிவத்தில் இருக்கும்.
(சென்ற ஆண்டு மொழி,இலக்கியம்,புகழ்பெற்றோர்,பொது ஆகிய பிரிவுகளில் வினாக்கள் இருந்தன.)
இவ்வாண்டு கீழ்க்காணும் பிரிவுகளில் வினாக்கள் இருக்கும்.

- பொது(வரலாறு, புவியியல் ,சமயம், இன்ன பிற)
- கலைச்சொல்
- புகைப்படம்
- திரைப்படம்
- திரைப்பாடல்கள்

வினாக்கள்:

1. தமிழர்களின் மருத்துவ முறை எது?
சித்த மருத்துவம்

2. தமிழ் இசைக்கும் நாட்டியத்துக்குமான முதல் இலக்கண நூல்/காப்பியம் எது?
சிலப்பதிகாரம்.

3. தொல்பொருள் ஆய்வில் தமிழர்களின் நதிக்கரை நாகரிகம் என கண்டறியப்பட்டது எது?
சிந்து சமவெளி நாகரிகம்.
(இன்று பாகிஸ்தானில் உள்ள சிந்து மாநிலப்பகுதி)

4. தமிழ் நாட்டில் உள்ள மலைத் தொடர்ச்சிகளின் பெயர்கள் யாவை?
மேற்குத் தொடர்ச்சி மலை,கிழக்குத் தொடர்ச்சி மலை.

5. தமிழ் நாட்டிற்கு மழை வழங்கும் காற்று எது?
வட கிழக்கு பருவக்காற்று.

6. தமிழ்நாட்டில் இரும்பு கிடைக்குமிடம் எது?
சேலம் மாவட்டம் கஞ்சமலை

7. தமிழ்நாட்டில் நிலக்கரி எங்கு தோண்டி எடுக்கப்படுகிறது?
நெய்வேலி

8. தமிழ்நாட்டில் நிலக்கரியிலிருந்து என்ன தயாரிக்கப்பட்டு அது எங்கெங்கு அனுப்பப்படுகிறது?
அனல் மின்சாரம்.
தென் மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா,ஆந்திரா,கேரளம்.

9. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் சிறந்து விளங்கும் நகரம் எது?
சிவகாசி

10. தமிழ் நாட்டில் போர்ப் பீரங்கிகள் தயாரிக்கும் தொழிற்சாலை எங்குள்ளது?
சென்னையிலுள்ள ஆவடி

11. பனியன் ஏற்றுமதியில் முதன்மையாக விளங்கும் நகரம் எது?
திருப்பூர்

12. கீழ்க்காணும் வினைச் சொற்களுக்கு நிகழ்காலம் எதிர்காலம் என்ன ?
ஓடினான் ஓடுகிறான் ஓடுவான்
விளையாடினான் விளையாடுகிறான் விளையாடுவான்
மகிழ்ந்தான் மகிழ்கிறான் மகிழ்வான்
கண்டேன் காண்கிறேன் காண்பேன்

13. கடல் கொண்ட தமிழ்ச்சங்கம் எங்கிருந்தது? அது தற்போதைய நிலப்பரப்பில் எந்தப்பகுதி?
குமரிக்கண்டம்.தமிழ்நாட்டின் தெற்கே இந்தியப்பெருங்கடல் பகுதியில் இருந்தது.

14. முன்னைத்தமிழர்களின் தனித்தமிழ்க்கடவுள் என்று பாவாணர் எந்தக்கடவுளை குறிப்பிடுகிறார்?
முருகன்

15. மறைமலை அடிகளும், திரு வி க வும் எதைத் தமிழர்கள் முருகனாக வணங்கியதாகக்கூறுகின்றனர்?
இயற்கையையும்,அதன் அழகையும் முருகனாக வணங்கினர்.

16. ஐம்பெருங்காப்பியங்களில் எந்தெந்த சமயங்கள் முதன்மையாகக் குறிப்பிடப்படுகின்றன?
பௌத்த,சமண சமயங்கள்

17. நபிகள் நாயகத்தின் வரலாற்றை, தமிழில் காப்பியமாக்கியவர் யார்?அந்த நூலின் பெயர் என்ன?
உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணம்

18. கவிஞர் கண்ணதாசன் எழுதிய ஏசு பிரானின் வாழ்க்கையைப்பற்றிய நூல் எது?
ஏசு காவியம்.

19. ஆழ்வார்கள் எழுதிய வைணவம் குறித்த பாடல்கள் உள்ள நூல் எது?
நாலாயிர திவ்யப்ரபந்தம்

20. தமிழக அரசின் சின்னமாக உள்ள கோபுரம் எந்த ஊரில் உள்ளது?
திருவில்லிப்புத்தூர்

21. ராமாயணத்தை தமிழில் வடித்த கம்பரை பாரதியார் எப்படி புகழ்கிறார்?
கல்வி சிறந்த தமிழ்நாடு
புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு

22. தமிழ்நாட்டில் முதல் கற்கோயில் எங்குள்ளது?
காஞ்சி கைலாசநாதர் கோவில்

23. சமயக்குரவர்கள் நால்வர் யாவர்?
அப்பர்,சுந்தரர்,ஞானசம்பந்தர்,மாணிக்கவாசகர்

24. 2008ம் ஆண்டிற்கிணையான தமிழ் ஆண்டு என்ன?
2039

25.கடையேழு வள்ளல்கள் யாவர்?
பாரி,காரி,ஓரி,ஆய்,பேகன்,அதியமான், நள்ளி

26. மெய் எழுத்துக்களின் வகைகள் யாவை?
வல்லினம்,மெல்லினம்,இடையினம்

27. கல்லனையை கட்டியவர் யார்?
கரிகாற்சோழன்

28. சேர,சோழ,பாண்டிய நாட்டின் சிறப்பு அடைமொழிகள் என்ன?
சேர நாடு வேழமுடைத்து
சோழ நாடு சோறுடைத்து
பாண்டிய நாடு நல்முத்துடைத்து

29. உலகம் முழுதும் உள்ள கோவில்களை எழுப்பும் தமிழ்ச் சிற்பிகளில் தலைமைச் சிற்பிகள் இருவரின் பெயர்கள் யாவை?
கணபதி ஸ்தபதி, முத்தையா ஸ்தபதி

30. மாமல்லபுரத்தை உருவாக்கியவர் யார்?
நரசிம்மவர்ம பல்லவன்

31. சென்னை மாநிலத்திற்கு "தமிழ் நாடு" என யாரால் பெயர் மாற்றப்பட்டது?
அறிஞர் அண்ணா

32. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் மலர் எது?
குறிஞ்சி மலர்

33. ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து கின்னசில் இடம் பிடித்த தமிழ் நடிகை யார்?
மனோரமா

34. அமெரிக்காவில் நாட்டியப் பள்ளி நடத்தி வந்த சிறந்த நடிகை யார்?
நாட்டியப் பேரொளி பத்மினி.

35. நடிகர் திலகம் நடித்த வரலாற்று படங்கள் இரண்டைக் கூறு?
ராஜ ராஜ சோழன்
வீரபாண்டிய கட்டபொம்மன்

36. ஆங்கில சொற்கள் எதுவும் உரையாடலில் பயன்படுத்தாமல் அண்மையில் எடுக்கப்பட்ட தமிழ் திரை படம் என்ன?அதன் இயக்குனர் யார்?
வாழ்த்துக்கள்.
சீமான்

36. இயக்குனர் தங்கர்பச்சான் இயக்கிய திரைப்படங்கள் இரண்டைக்கூறு?
அழகி,சொல்ல மறந்த கதை,பள்ளிக்கூடம், ஒன்பது ரூபாய் நோட்டு

37. பிள்ளைகளுக்காக ஒரு தந்தையின் அர்ப்பணிப்பைக் காட்டும் இயக்குனர் சேரனின் படம் எது?
தவமாய்த் தவமிருந்து.

38. இந்திய விருது பெற்ற இயக்குனர் பாரதிராஜாவின் திரைப்படம் எது?
கருத்தம்மா.

39. ஈழ மக்களின் போராட்ட வாழ்வை மையமாக வைத்து எடுக்கப்பட்ட தமிழ்த்திரைப்படம் எது?அதில் முதன்மைப்பத்திரத்தில் நடித்த தமிழ் நடிகர் யார்?
ஆணிவேர். நந்தா.

40. தமிழர்களின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகித்த இரு தலைவர்களின் வாழ்க்கை திரைப்படமாகியுள்ளது.அவர்கள் யார்?
காமராஜர்,பெரியார்.

41. Godfather ஆங்கிலப்படத்தைத் தழுவி தமிழில் கலை ஞானி கமலஹாசன் நடித்த திரைப்படம் எது?இதன் இயக்குனர் யார்?
நாயகன்.மணிரத்னம்.

42. இந்திய திரைப்படங்களில் அதிக பொருளீட்டிய தமிழ் படம் எது?
நடிகர் ரஜினிகாந்த் நடித்த சிவாஜி

43. திரைப்பாடல்களில் சாமான்ய மக்களின் எண்ணங்களை, புரட்சிகர சிந்தனைகளை பாடிய மக்கள் கவிஞர் யார்?
(சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா)
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

44. கீழ்க்காணும் பழமொழிகளை நிறைவு செய்யவும்.
முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
சிறு துரும்பும் பல் குத்த உதவும்
கந்தையானாலும் கசக்கிக்கட்டு
கூழானாலும் குளித்துக் குடி
ஊருடன் கூடி வாழ்
உப்பிட்டவரை உள்ளளவும் நினை
கண்டதை கற்க பண்டிதராவான்

45. வார நாட்கள் யாவை?
ஞாயிறு,திங்கள்.செவ்வாய்,புதன்,வியாழன்,வெள்ளி,சனி

46. தமிழ் மாதங்கள் யாவை?
தை,மாசி,பங்குனி,சித்திரை,வைகாசி,ஆனி,ஆடி,ஆவணி,புரட்டாசி,ஐப்பசி,கார்த்திகை,மார்கழி

47. தமிழ்நாட்டின் முதலமைச்சர் யார்?
கலைஞர் மு.கருணாநிதி

48. தமிழ்நாட்டின் மக்கள் தொகை என்ன?(கோடிகளில் – தோராயமாக)
6–8 கோடி

49. ஈழத்தமிழர்களின் மக்கள் தொகை என்ன?
35 லட்சம்

50. ஈழ விடுதலைப் போரில் உயிரழந்தவர்கள் எத்தனை பேர்?
புலம் பெயர்ந்தோர் எத்தனை பேர்?
உயிரழந்தவர்கள் – 1 லட்சம்
புலம் பெயர்ந்தோர் –10 லட்சம்

50. உலகிலேயே ஈழத் தமிழர்கள் அதிகமாக வாழும் நகரம் எது?
கனடா நாட்டிலுள்ள டொராண்டோ நகரம்.

51. தமிழர்களின் நாட்டிய முறையின் பெயர் என்ன? அதன் மற்றொரு பெயர் என்ன?
சதிர். அதன் மற்றொரு பெயர் பரத நாட்டியம்.

52. கிரிக்கெட் விளையாட்டில் உலகின் முன்னணி பந்து வீச்சாளராக திகழும் தமிழர் யார்?
முத்தையா முரளிதரன்

53.திருக்குறளின் மூன்று அதிகாரங்கள் என்ன?
அறத்துப்பால்
பொருட்பால்
இன்பத்துப்பால்

54. திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலும் எத்தனை குறள்கள் உள்ளன?
அறத்துப்பால் – 380
பொருட்பால் – 700
இன்பத்துப்பால் – 250

55. திருப்புகழைப் பாடியவர் யார்?
அருணகிரிநாதர்.

56. தமிழ்நாட்டில் உள்ள சில உள்விளையட்டுக்கள் யாவை?
சதுரங்கம்
ஆடுபுலியாட்டம்
தாயம்
பல்லாங்குழி
பரமபதம்

57. தமிழர்களின் வெளிவிளையாட்டுக்கள் சில யாவை?
சடுகுடு
கில்லி
கோலியாட்டம்
பம்பரம்
உரியுடைத்தல்
மஞ்சுவிரட்டு

58. தமிழ்நாட்டில் காபியும் தேயிலையும் எங்கு விளைகின்றன?
காப்பி – ஏற்காடு
தேயிலை – நீலகிரி

59. ஐம்புலன்கள் யாவை?
மெய், வாய், கண், மூக்கு, செவி

60. அறுசுவைகள் எவை?
உவர்ப்பு,துவர்ப்பு,காரம்,இனிப்பு.புளிப்பு,கசப்பு

**தமிழ்ச்சொல் அறிதல்:**
முனைவர் – Doctorate/Dr
ஆவணப்படம் – Documentary
மருத்துவர் – Physician
கடவுச்சொல் – Password
விரைவு உணவு – Fast Food
வணிக வளாகம் – Mall
மடிக்கணணி – Laptop
வரைகலை – Graphics
சந்தை – Market
நீச்சல்குளம் – Swimming pool
சறுக்கு விளையாட்டு – Skating
கோப்பு – File
கோப்புரை – Folder
அலைபேசி/செல்பேசி – Cell phone
கூடைப்பந்து – Basket ball
இரட்டைக்குடியுரிமை – Dual citizenship
சரக்கு ஊர்தி – Truck
நகல் – Photo copy
அச்சுப்பொறி – Printer

- தமிழ்,தமிழ் நாடு தொடர்பான **புகைப்படங்களைக்** கண்டறிதல். இதில் முக்கிய சுற்றுலா தளங்களும்,புகழ் பெற்றோர் படங்களும் இடம்பெறும்?

<u>பாடல் கண்டறிதல்:</u>

கீழ் காணும் திரைப்பட பாடல்களைக் கேட்டு வரவும்.
பாடலின் முதல் 4/8 வரிகளில் வினாக்கள் வரலாம்.

- இசையைக் கேட்டுப் பாடல் அறிதல்.
- இரண்டு வரிகளைக் கேட்டு, மேலும் இருவரிகளைப் பாடுதல்
- பாடல் கேட்டுப் பொருள்கூறுதல்

பாடல்கள்:

- சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா (படம் – அரசிளங்குமரி)
- சின்ன சின்ன ஆசை(படம் – ரோஜா)
- பாரத சமுதாயம் வாழ்கவே(படம் – பாரதி)
- அமுதே தமிழே அழகிய மொழியே எனதுயிரே (படம் – கோயில் புறா)
- தமிழா தமிழா நாளை உன் நாளே (படம் – ரோஜா)
- தங்கமே தமிழுக்கில்லை தட்டுப்பாடு (படம் – டூயட்)
- அச்சம் என்பது மடமையடா (படம் – மன்னாதி மன்னன்)
- வலியோர் சிலர் எளியோர்தமை (படம் – சிவப்பதிகாரம்)
- தஞ்சாவூரு மண்ணு எடுத்து (படம் – பொற்காலம்)
- தமிழ் நாட்டில் எல்லாருக்கும் எதிர்காலம் நல்லாருக்கும் (படம் – மாயாவி)
- புத்தன் ஏசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக (படம் – சந்திரோதயம்)